O.S.49/2023

**PW.1** விக்னேஷ்

11-03-2026 ஆம் தேதி அன்று சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் எனது தந்தையை மருத்துவமனைக்கு சென்று பார்க்கவில்லை என்றும், அதனால்தான் அவர் எந்த பிளாக்கில், எந்த தளத்தில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தைக்கு எப்பொழுதிலிருந்து சர்க்கரை நோய் இருந்தது என்று எனக்கு தெரியாது. ஆனால் மருந்து எடுத்துக் கொள்ளும் விவரம் எனக்கு தெரியும். அவர் எப்பொழுதிலிருந்து மருந்து எடுத்து கொண்டிருந்தார் என்று எனக்கு ஞாபகமில்லை. எனது தந்தைக்கு மருத்துவமனையில் எவ்வளவு தொகை செலுத்தப்பட்டது என்று எனக்கு தற்பொழுது ஞாபகமில்லை. ஒருவாரம் அனுமதிக்கப்பட்டிருந்த சமயத்தில் எனது தந்தைக்கு ரூ.30,000/- செலவானது. சரியாக தொகை எவ்வளவு என்று எனக்கு தெரியாது. மருத்துவ செலவுகளை 1 ஆம் பிரதிவாதிதான் செலுத்தி வந்தார் என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தையின் பணத்திலிருந்துதான் செலுத்தப்பட்டது. எனது தந்தையின் பணத்திலிருந்து மருத்துவ கட்டணம் செலுத்தப்பட்டது என்ற விவரம் எனக்கு எப்படி தெரிய வந்தது என்றால், நான் தொழில் தொடங்குவதற்கு எனது தந்தையிடம் பணம் கேட்டேன். அதற்கு எனது தந்தை மருத்துவ செலவு ஆகி விட்டது என்றும், மற்றும் நிறைய நபர்களுக்கு அவர் பணம் கொடுத்து வைத்துள்ளதாகவும், அதனால் அப்பொழுது தொகை இல்லை என்று என்னிடம் கூறியதை வைத்து நான் கூறுகிறேன். முதல்

தடவை எனது தந்தை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த சமயத்தில் ரூ.60,000/- செலவானது என்றும், ஆனால் எந்த விவரமும் தெரியாமல் நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு 2018 ல் விபத்து ஏற்பட்டு கொங்குநாடு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தேன். 29-01-2018 அன்று எனக்கு விபத்து நடந்தது. நான் மருத்துவமனையில் இருந்த சமயத்தில் எனது தந்தை இரண்டுமுறை என்னை வந்து பார்த்தார். சரியாக தேதி நினைவில்லை. எனக்குண்டான மருத்துவ செலவுகளுக்கு எனது தந்தைதான் பணம் கொடுத்தார். எனக்கு விபத்து ஏற்பட்ட சமயத்தில் எனது தந்தை 1 ஆம் பிரதிவாதியின் சகோதரியின் மகள் திருமணத்திற்கு நாகர்கோவிலுக்கு 28-01-2018 அன்று சென்றிருந்தார் என்றும், அங்கு மூன்று நாட்கள் தங்கியிருந்தார் என்றும், அதனால் என்னை வந்து பார்த்திருக்க வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தை இன்சுலின் போட்டு கொண்டிருந்தாரா என்று எனக்கு தெரியாது. எனது தந்தை சர்க்கரை நோய் காரணமாக இடது காலில் ஏற்பட்டிருந்த இன்ஃபெக்சனுக்கு குப்புசாமி நாயுடு மருத்துவமனையில் மருத்துவம் பார்த்து கொண்டார். எந்த மருத்துவர் எனது தந்தைக்கு மருத்துவம் பார்த்தார் என்று எனக்கு தெரியாது. வா.த.சா.ஆ.24 மற்றும் வா.த.சா.ஆ.25 ஆவணங்களை நான் 11-11-2022 அன்று மனு செய்து அதற்குரிய தொகைகளையும் செலுத்தி மருத்துவமனையிலிருந்து பெற்றேன் என்று சொன்னால் சரிதான். 18-05-2021 தேதி அன்று எனது தந்தை காலமானார். வா.த.சா.ஆ.24 மற்றும் 25 ஆவணங்களை எனது தந்தையின் இறப்பிற்கு பின்புதான் பெற்றேன் என்று சொன்னால் சரிதான். எனது தந்தையை நான் மருத்துவமனையில் உடன் இருந்து பார்த்துக் கொள்ளாத

காரணத்தினால்தான் மருத்துவமனையில் மனு செய்து பின்னர் இதை பெற்றேன் என்று சொன்னால் சரியல்ல.

இடிகரையில் எனது தந்தை பெயரில் இருந்த சொத்து வாங்கும்பொழுது காலியிடமாக இருந்தது. எப்பொழுது வீடு கட்டி கிரகபிரவேசம் நடைபெற்றது என்று எனக்கு தெரியாது 2018 ஆக இருக்கலாம். வீடு எப்பொழுது கட்டி முடிக்கப்பட்டது என்று நான் நேரடியாக தெரிந்து கொள்ளவில்லை. ஆனால் அதற்கு முன்பு பிள்ம்பிங் ஒர்க் செய்வதற்கும், வாஷ்பேசின், கிளாசெட், டேப் பிட்டிங்ஸ் போன்றவற்றிற்கு யாரை அமர்த்தலாம் என்று எனது தந்தை என்னிடம் ஆலோசனை கேட்டார். எந்த வருடம் அவ்வாறு கேட்டார் என்று எனக்கு ஞாபகமில்லை. நான் வீடு கிரகபிரவேசத்திற்கு செல்லவில்லை. வீடு கிரகபிரவேசம் செய்த சமயத்தில் நான் கோயமுத்தூரில் இல்லை. 2018 ல் மாதம் நினைவில்லை, 20 அல்லது 25 நாட்கள் நான் வெளியூரில் இருந்தேன். 2017 ல் நான் வெளியூர் சென்றிருந்தேனா என்று எனக்கு நினைவில்லை. 2017 லேயே வீடு கட்டி முடிக்கப்பட்டு கிரகபிரவேசமும் நடைபெற்றது என்றும், ஆனால் நான் எந்த விவரமும் தெரிந்து கொள்ளாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தை செக்கப்பிற்காக அவ்வப்பொழுது ஜி.கே.என் மருத்துவமனைக்கு சென்று வருவார். எத்தனை முறை சென்றார் என்று எனக்கு ஞாபகில்லை. எனது தந்தை மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்ட பின்பு மீண்டும் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றும், வீட்டிலேயே வைத்து அவருக்கு மருத்துவம் பார்க்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் எனது தந்தை பெயரில் உள்ள சொத்து வரி ரசீதுகள் ஆகும். எனதுதந்தை பெயரில் ஐந்து

வீடுகள் உள்ளது. ஐந்து வீடுகளுக்கும் 27-07-2017 ல் வரி கட்டியதாக ரசீதுகளில் காணப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ரசீதுகள் பற்றிய விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது. ஆனால் நான் எனது தந்தை பெயரில் உள்ள ஐந்து வீடுகளுக்கும் கட்டிய சொத்து வரி ரசீதுகள் மற்றும் தண்ணீர் வரி ரசீதுகளை நீதிமன்றத்தில் வா.த.சா.ஆ.10 முதல் 12 ஆக குறியீடு செய்துள்ளேன். வா.த.சா.ஆ.10 முதல் 12 ரசீதுகளை தவிர வேறு எந்த வருடத்திற்கும் நான் பணம் செலுத்தவில்லை. தற்பொழுது சொத்துவரி எவ்வளவு என்று எனக்கு தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது தந்தை இறந்த பிறகு நான்தான் சொத்து வரி செலுத்தி வருகிறேன் என்று நான் குறிப்பிட்டுள்ளது தவறு என்று சொன்னால், சரியல்ல. வா.த.சா.ஆ.10 முதல் 12 ஆவணங்களை தவிர வேறு எந்த வரியையும் நான் எந்த வருடமும் செலுத்தியதில்லை என்றும், வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வா.த.சா.ஆ.10 முதல் 12 ஆவணங்களும் வழக்கிற்காக செலுத்தப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தை இறந்த பிறகு சித்தாபுதூரில் சாமி கும்பிட்ட சமயத்தில் முதல் பிரதிவாதி என்னை அழைத்து கேரளாவில் உள்ள எனது தந்தை பெயரில் உள்ள வீடும், தனக்கு வரும் பென்சனும் அவருக்குபோது என்றும், இங்குள்ள சொத்துக்களை நீயே பார்த்து கொள் என்று என்னிடம் கூறியதை தொடர்ந்து நான் சொத்து வரி மற்றும் தண்ணீர் வரியை நான் கட்டினேன். 1 ஆம்பிரதிவாதிஅவ்வாறு என்னிடம் எப்பொழுதும் கூறியதில்லை என்றும், வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

நான் டிப்ளமோ எலெக்ட்ரானிக் அன்ட் கம்யூனிக்கேஷன் படித்துள்ளேன். கல்லூரியில் எனது தாயார்தான் ஆவணங்களில் கையொப்பம் செய்தார். எனது தந்தை

கல்லூரிக்கு வந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தைதான் எனது முழு படிப்பு செலவையும் பார்த்து வந்தார். எனது சொந்த செலவுகளையும் எனது தந்தை நான் படிக்கும்பொழுது பார்த்து கொண்டார். வா.த.சா.ஆ.26 இன்சூரென்ஸ் எடுக்கப்பட்ட சமயத்தில் இரண்டு வருட பிரிமியத்தை எனது தந்தை செலுத்தினார். அந்த ரசீதுகளை நான் தாக்கல் செய்யவில்லை, காரணம் அவைகளை எனது தந்தைதான் செலுத்தினார். அது எனது தந்தையிடமிருந்து auto payment ஆக இன்சூரென்ஸ் நிறுவனம் வாங்கியிருக்கும், ஆனால் இன்சூரென்ஸ் நிறுவனத்திடமிருந்து நான் ஸ்டேட்மெண்ட் எதுவும் பெற்று கொள்ளவில்லை. வா.த.சா.ஆ.26 ன் அடிப்படையில் இருந்த தொகைகளை நான் பாலிசியை சரண்டர் செய்து பெற்று கொண்டேன். வா.த.சா.ஆ.26 ல் நாமினியாக எனது தந்தையின் பெயர்தான் உள்ளது.

எனது முதல் சாட்சியத்தில் பத்தி 14 ல் கொட்டாக்மகேந்திரா வங்கியில் எனது தந்தை பெயரில் நிரந்தர வைப்பீடு தொகையாக ரூ.4,75,000/- இருந்ததாக நான் கூறுவது தவறு என்று சொன்னால், சரியல்ல. நான் தாக்கல் செய்த வா.த.சா.ஆ.29 ஆவணமானது ஒரு இன்சூரென்ஸ் சம்மந்தப்பட்ட ஆவணம் என்றும், வைப்பீடு செய்யப்பட்ட ஆவணம் இல்லையென்றும் சொன்னால் சரிதான். மேற்சொன்ன விவரம் இன்சூரென்ஸ் ஏஜெண்ட் கூறியதன் அடிப்படையில்தான் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தை என்னிடம் கூறியுள்ளார். நான் கூறுவது தவறு என்றும், எனது தந்தை என்னிடம் கூறியிருந்தால் வைப்பீடு என்று நான் கூறியிருக்க வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. பொதுவாக நாமினியாக யார் பெயர் குறிப்பிடப்படுகிறதோ அவரிடம்தான் தொகையை கொடுப்பார்கள் என்று சொன்னால் சரிதான். அதன்

அடிப்படையில்தான் 1ஆம் பிரதிவாதி அந்த தொகையை பெற்றார் என்று சொன்னால் நாமினி என்ற அடிப்படையில் அந்த தொகையை அவர் பெற்றார். அதேபோன்று எனது தந்தையின் பெயரில் இருந்த வங்கி கணக்குகள் மற்றும் வைப்பீடுகளில் 1 ஆம் பிரதிவாதியைதான் நாமினியாக போட்டிருந்தார் என்று சொன்னால் சரிதான்.

எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 18 ல் கண்ணன் என்பவருக்கு எனது தந்தை ரூ.10 லட்சம் கடனாக கொடுத்ததாக நான் குறிப்பிட்டுள்ளேன். அவர் டி.பி சாலையில் எண்ணைய் கடை நடத்தி வருகிறார். எனது தந்தை அந்த தொகையை பணமதிப்பிழப்பு சமயத்தில் கொடுத்திருந்தார். எவ்வாறு அந்த தொகை கொடுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. அந்த தொகையை திருப்பி கேட்டு மேற்படி கண்ணனுக்கு நான் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை, தாவாவும் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் ஒருமுறை நேரில் சென்று கேட்கலாம் என்று கடைக்கு சென்றபொழுது அன்று அவர் கடையில் இல்லை. அவருடைய மனைவி மட்டும்தான் இருந்தார். அவரது மனைவியிடம் கேட்டபோது கண்ணன் வெளியூருக்கு சென்றிருப்பதாக கூறினார். அதன் பின்னிட்டு நான் கேட்கவில்லை. உண்மையில் எனது தந்தை கண்ணகுக்கு கடன் கொடுத்திருந்தால் கண்ணனிடம் அந்த தொகையை பெற நான் சட்ட நடவடிக்கை எடுத்திருப்பேன். கொடுக்காத காரணத்தினால்தான் சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

சலீம் என்பவருக்கு எனது தந்தை ரூ.15 லட்சம் கடனாக கொடுத்ததாக எனது தந்தை கூறி எனக்கு தெரியும். அந்த தொகையை பண மதிப்பிழப்பு சமயத்தில் சலீமிற்கு கொடுத்தார். அந்த தொகையை திருப்பி கேட்டு நான் அறிவிப்போ, தாவாவோ எதுவும்

தாக்கல் செய்யவில்லை. ஆனால் நான்கு முறை நேரில் சென்று விசாரித்தேன். சலீமின் வீடு மதுக்கரையில் உள்ளது. எனது தந்தை சலீமிற்கு அவ்வாறு தொகை எதுவும் கொடுக்கவில்லை என்றும், உண்மையில் அவ்வாறு கொடுத்திருந்தால் அந்த தொகையை நான் அவர்களிடமிருந்து உரிய முறையில் பெற்றிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

எனது தகப்பனாரின் அத்தை அங்காத்தாள் எப்பொழுது இறந்தார் என்று எனக்கு தெரியாது. அப்பொழுது நான் பிறக்கவில்லை. சாட்சி தற்பொழுது தனக்கு தேதி நினைவில்லை என்று கூறுகிறார்.

எனது தந்தை ஸ்ரீஅபிராமி ரியல் எஸ்டேட் பிரமோட்டர்ஸ் என்ற நிறுவனத்திடமிருந்து எந்த, எந்த இடங்களில் வீட்டு மனைகள் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. வீட்டு மனைகள் வாங்கியதுதான் எனக்கு தெரியும். நான் மேற்சொன்ன நிறுவனத்திடம் சென்று கேட்டபொழுது என் தந்தை பெயரக்கு இன்னும் வீட்டுமனை கிரையம் செய்யப்படவில்லை என்றும், அவர் பெயரில் இடம் புக் செய்யப்பட்டுள்ளது என்றும் கூறினார். எனது தந்தை எவ்வளவு மாதங்கள் அதற்கு தொகை செலுத்தினார் என்று எனக்கு தெரியாது. சித்தாபுதூரில் எனது தந்தை குடியிருந்த வீடு எந்த திசையில் இருந்தது என்று எனக்கு தெரியாது. ஆனால் அந்த சந்தில் வலது மூலையில் எனது தந்தையின் வீடு இருந்தது. எனது தந்தையின் வீட்டிற்கு அருகில் ஒரு அய்யப்பன் கோவில் இருந்தது. தந்தையின் வீட்டிற்கு பின்புறம் வேறு வீடுகள் இருந்ததா என்று எனக்கு தற்பொழுது நினைவில்லை. எனது தந்தையை

பார்ப்பதற்கு நான் வீட்டிற்கு சென்றதில்லை. என் தந்தையை பார்க்க அய்யப்பன் கோவிலுக்கு செல்வேன்.

எனது தந்தை இறந்த இரண்டு மாதத்திற்குள் நான் முதல் பிரதிவாதியை அணுகி சொத்துக்கள் விவரமாக பேசினேன். எனது தகப்பனாரின் நண்பர் பட்டீஸ்வரர் மூலமாக பேசினேன். ஒருமுறை எனது தந்தை தங்கியிருந்த சித்தாபுதூர் வீட்டில் வைத்தும், மற்றொரு முறை ஆனைமலையில் உள்ள பட்டீஸ்வரர் வீட்டிலும் பேசினேன். மே 2022 ல் பட்டீஸ்வரர் வீட்டில் வைத்து பேசினோம். அப்பொழுது 1 ஆம் பிரதிவாதியும் உடன் இருந்தார். எனது தந்தையின் இறப்பிற்கு பின்னர் வருடா, வருடம் நானும், 1 ஆம் பிரதிவாதியும் தனித்தனியாக சாமி கும்பிடவேண்டுமென்று 1 ஆம் பிரதிவாதி பட்டீஸ்வரரிடம் கூறினார். இந்த விவரங்களை நான் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான்.

12-10-2021 தேதி அன்று இடிகரை இ.பி காலனியில் உள்ள 1 ஆம் பிரதிவாதியின் வீட்டிற்கு நான் சென்று பிரச்சனை செய்ததால் பெரியநாயக்கன்பாளையம் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு என்னை அழைத்து போலீசார் விசாரித்தார்கள் என்று சொன்னால், சரியல்ல. புகார் கொடுத்தார்கள், ஆனால் நான் 1 ஆம் பிரதிவாதியிடம் பிரச்சனை செய்யவில்லை. நானும் 1 ஆம் பிரதிவாதியும் பேசி கொண்டதன் அடிப்படையில் இடிகரையில் உள்ள எனது தந்தைக்கு சொந்தமான ஒரு வீட்டில் நான் குடியிருக்கலாம் என்று அந்த வீட்டை பூட்டுவதற்காக நான் சென்றபொழுது 1 ஆம் பிரதிவாதி புகார் கொடுத்து என்னை அழைத்தார்கள். நான் போலீசாரிடம் விவரங்களை கூறினேன். என்னை விசாரித்த பின் போலீசார் என்னை அனுப்பி விட்டார்கள். அந்த

நிகழ்விற்கு பின்னர் நான் பூட்டிய அந்த வீட்டிற்கு 1 ஆம் பிரதிவாதி குடி பெயர்ந்து விட்டார். நான் கூறுவது தவறு என்றும், 1ஆம் பிரதிவாதியிடம்நான் பிரச்சனை செய்யதான் சென்றேன் என்றும், அதனால்தான் எனக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 2021லேயே எனக்கும் 1 ஆம் பிரதிவாதிக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றும், அதனால் பட்டீஸ்வரர் வீட்டிற்கு பஞ்சாயத்திற்கு 1 ஆம் பிரதிவாதி வந்திருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்குள் அப்பொழுது பிரச்சனையே இல்லை. நான் கூறுவது தவறு என்றும், பிரச்சனை இல்லாமல் இருந்திருந்தால் எனக்கு எதிராக புகார் கொடுத்து புகார் ரசீது 1 ஆம் பிரதிவாதி பெற்றிருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல.

நான் 1 ஆம் பிரதிவாதிக்கு 21-12-2021 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். அதற்கு முன்னரே 1 ஆம் பிரதிவாதி உயிலை மெய்ப்பிக்க இந்த நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார் என்று சொன்னால், அதை பற்றி எனக்கு தெரியாது. Probate OP. தாக்கல் செய்யப்பட்ட பின்னிட்டுதான் நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்று சொன்னால் சரியல்ல. உயில் இருக்கும் விவரத்தை தெரிந்து கொண்டு வேண்டுமென்றே தவறான லாபம் அடையும் நோக்கில் இந்த பிராதை நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த பிராது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை sd/ விக்னேஷ்,

Taken down by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/G.Vijaya,
Principal District Judge,
Coimbatore.